Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 23

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 6 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. ‘சிலைகள் இருந்தது’ என்பது

1. இடவழு 2. காலவழு 3. எண்வழு 4. திணைவழு

02. தோலாடை என்பதில் இடம்பெற்றுள்ள பணர்ச்சி

1. இயல்புப் புணர்ச்சி 2. தோன்றல்புணர்ச்சி 3. விகாரப் புணர்ச்சி 4. திரிதல் புணர்ச்சி

03. ‘கூனலிளம் பிளை’ என்பது

1. தொழிற்பெயர் 2. சினைப்பெயர் 3. பண்புப்பெயர் 4. பொருட்பெயர்

04. பின்வருவனபற்றுள் உயர்திணை முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல்லாக அமைவது

1. நீர் 2. அவர்கள் 3. செய்தீர்கள் 4. நீவீர்

05. பின்வருவனவற்றுள் 4 ஆம் வேற்றுமைத் தொகை

1. சிறுவர் இல்லம் 2. மீன் சந்தை 3. கிணற்றுத் தவளை 4. பாக்குவெட்டி

06. விருதுபெற்று வந்தவனை வரவேற்றோம் வந்தவனை என்பது

1. பெயரெச்சம் 2. தொழிற்பெயர் 3. இறந்தகாலவினை முற்று 4. வினையாலணையும் பெயர்

பகுதி 2

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்படுகின்ற வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக

01. வரகும் எள்ளும் முளைச்சு முதிர்ந்து கிடக்கின்ற இந்தப்புன்செய்களை விட்டுவிட்டுப் போகவேண்டியது தான். நிலத்தில் புதைக்கப்பட்டு வெளியே எடுத்த கள்ளை ஒவ்வொரு குடிசையாய் பகிர்வார்களே. கள் மணக்கும் இந்தக் குடிசைகளை விட்டுவிட்டுப்போக வேண்டியது தான்.

1. இவ்வுரைப்பகுதி இடம்பெற்ற பாடப்பரப்பு யாது?
2. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
3. இந்தக்கூற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்ற அந்நில மக்களின் வாழ்வியலை தெளிவு படுத்துக
4. இக்கூற்று உணர்த்துகின்ற உணர்வினை விளக்குக

02. “ஆம்.. புறப்படவேண்டியது தான்.(அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு இவற்றைக் காதுகொடுத்துக்கேட்கின்றார்). இப்போ இந்த மலையை பிரிவது மலையை விட கூடுதலாக கனக்கிறதே. ஆனால் என் அருமைச்செல்வங்களே புறப்படவேண்டியது தான். பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்கு குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக்கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம், பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்திருந்தால் பேச்சுக்கொடுத்திருப்பார். புறப்படுகிறோம் பறம்பே.. மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது. அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள் நீர்வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும். பறம்பு மலையே நீ வாழ்க

1. பறம்பு மலை மீதான கபிலரின் அன்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. இடப்பெயர்வின் வலி இவ்வுரைப்பகுதியின் ஊடாக எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?